நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை
தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: 8
தொகுதி: 114
திருவள்ளுவர் ஆண்டு 2051

திங்கள் இதழ்
விலை: ரூ.20
ஆகஸ்ட் - 2020

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி	தலைவர்
மருத்துவர் ந.சேதுராமன்	துணைத் தலைவர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	செயலாளர்
திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	உறுப்பினர்
முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	உறுப்பினர்
பொறியாளர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
பேராசிரியர் இரா.சதாசிவம்	உறுப்பினர்
வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன்	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
வழக்குரைஞர் ச.தசரதராமன்	உறுப்பினர்
திரு. துரை கருணாநிதி	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் ச.தசரதராமன்	தலைவர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	செயலாளர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்
வழக்குரைஞர் து.மாயராசன்	உறுப்பினர்
வழக்குரைஞர் சு.சிவசாமி	உறுப்பினர்
பொறிஞர் லெ.சிவக்குமார்	உறுப்பினர்
வழக்குரைஞர் ஆர்.பாலாஜி	உறுப்பினர்
திரு. ஜெ.பாலதண்டாயுதம்	உறுப்பினர்
முனைவர். ம.லெல்லிஸ்திவாகர் பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். கி.வேணுகா முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். கோ.சுப்புலெட்சுமி துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். பா.நேருஜி உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. இதழ் மணம் – பேராசிரியர் இரா. சதாசிவம் 4

2. சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா 7
– முதுமுனைவர் இரா. இளங்குமரன்

3. திருவள்ளுவர் சமயச் சார்பு அற்றவர்
– பேராசிரியர். இ.கி.இராமசாமி 9

4. அடுக்கு எனும் இலக்கியவுத்தி
– பேராசிரியர் ப. மருதநாயகம் 20

5. சங்கச் செய்திகள் 42

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ.200	ரூ.1,000
ஆயுள் கட்டணம்	ரூ,3,000	ரூ.10,000
புரவலர் கட்டணம்	ரூ.10,000	ரூ.20,000
தனி இதழ்க் கட்டணம்	ரூ.20	

இதழ் மணம்

பேராசிரியர் இரா.சதாசிவம்

இந்த இதழில் பேராசிரியர் இரா.இளங்குமரனாரின் உள்ளத்தால் "ஓரேர் உழவன்" "ஒக்கல் வாழ்க்கைதட்குமதாலே" என்னும் தொடர்கள் நீளநினைக்குமாறு ஒரு தூண்டலை ஏற்படுத்தி இருக்கிறது.

தமிழ்ச்சமுதாயத்தின் அரசியல், பொருளாதார சமுதாயச்சிந்தனை எதிர்மறைச்சிந்தனையாகவே அமைந்துள்ளது. பெரும்பான்மையாக உள்ள மக்களுக்கு உறுதுணையாக இருந்து பொருளாதார கட்டமைப்பை ஏற்படுத்துவதும் அதன்வழி நலவாழ்வை மக்களுக்கு அளிப்பதும் நாகரிக சமுாயத்தின் சிறப்புக் கோட்பாடாகும். எல்லா மக்களும் உழைத்துப் பொருளீட்டுவதற்குரிய பொருளியல் வழிமுறைகளும் சிரமம் இன்றி வேலைசெய்வதற்குரிய தொழில் வளர்ச்சியும் கட்டமைக்கப்படுவதன் மூலம் மக்கள் வேலை செய்யும் போதும் மகிழ்ச்சியும் உற்பத்தியாரும் பொருளை அனுபவிக்கும் போதும் மகிழ்ச்சி அடைவார்கள். இத்தைகைய பொருளியல் கோட்பாட்டை உருவாக்குவது குடியாட்சி மரபும் பொருளாதார ஏற்றத்தாழ்வைக் குறைத்து எல்லோருக்கும் உடல் நலத்திற்கு ஏற்ற உணவு மற்றபிற வாய்ப்புகளை ஏற்படுத்தி நாட்டை வளப்படுத்தி வல்லரசாக மாற்ற முடியும். ஓரேர் உழவன் அனைந்து பார்த்து போர் விரானங்களை வியக்க வேண்டும் என்னும் பொருளாதார சிந்தனை பழைய நாளில் போர்க்களவேள்வியாகவும் இக்காலத்தில் விளம்பரவேள்வியாகவும் உள்ளன என்றால் மிகை ஆகாது. "ஒக்கல் வாழ்க்கை தட்டுமாகாலே" என்பதும் வேலை செய்யும் வாய்ப்பும் அதனை நேர்மையாக கொண்டு செலுத்துகின்ற கட்டமைப்பும், பொதுவாழ்க்கையில் பொது ஒழுக்கம் இல்லாதபோது நடைமுறை சாத்தியமில்லை, அந்நியர் ஆட்சி மறைந்து ஓராயிரம் ஆண்டுகள் கழிந்த பின்னும் அதிகார வர்க்கத்தின் துரைத்தனம் நீங்கியது பாடில்லை. இந்நாட்டு மக்கள் அந்நியர் ஆட்சியில் துரைத்தனத்தரால் எப்படி அரசுகளால் நடத்தப்பட்டனவோ அதுபோலவே இன்றும நடத்தப்படுகின்றனர். இலக்கியம் படிப்பதற்கு மட்டுமல்ல; அதுவாழ்க்கையின் மேன்மைகளை எடுத்துரைப்பதுமாகும். நம்முடைய கல்விச்சாலைகளும் கற்றவர்களும் தங்களை சமூகத்திலிருந்து வேறுபட்டு நின்று பார்க்கின்ற மனநிலை (psychic structure) மாறும் காலம்தான் இதற்கு வழி வகுக்கும். பேராசிரியர் ப.மருதநாயகம் அவர்கள் கிரேக்க நாட்டு

திருவள்ளுவர் குறித்து உரை ஆசிரியர் பரிமேலழகர், "எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லாருக்கும் பொதுப்படக்கூறுதல் இவர்க்கு இயல்பு ஆதலின் ஈண்டும் பொதுப்பட நூலோர் என்றும் அவர் எல்லார்க்கும் ஒப்பமுடிதலான் இது தலையாய அறம் என்றும் கூறினார்" எனத் திருக்குறளின் சார்பின்மையை எடுத்துரைப்பது அறிதற்குரியது.

திருவள்ளுவர் தான் சார்ந்த சமயம், பிறப்பு, இனம், மொழி, நாடு பற்றியதொரு குறிப்பும் சொல்லவில்லை. அவருடைய நூல் உலகத்தவர் வாழ்க்கை குறித்தது அவர் ஒரு மெய்யுணர்வாளர்; பேராசிரியர் இ.கி.ரா. நம்பிக்கைகள், சமயச்சாயல் என்பன குறித்து தம் கட்டுரையில் எழுதியுள்ளார். நம்பிக்கைகள் உண்மையல்ல; சமய, நம்பிக்கைகளும் அவை சார்ந்த சடங்குகள், பழக்க வழக்கங்கள் புனிதமானவை என்பது சமயம். இவையே சமயங்களின் வேர்.

திருவள்ளுவர் முப்பாலுள்ளும் இவ்வுலக நெறிமுறைகளை அறம் பொருள் இன்பம் எனத் தெளிவாகப் பேசுகிறார். இவையல்லாத இன்னொரு உலகத்தைப் படைக்கவில்லை; இவ்வுலக வாழ்க்கையைக் கற்று இனிது வாழ்வதுதான் அவர் நோக்கம். அறத்தான் வருவதே இன்பம் என்றும், செய்க பொருளை என்றும், அறிதோறும் அறியாமை கண்டற்றால் என்றும் இவ்வுலகப் பேற்றையே வலியுறுத்துகின்றார். "உணலினும் உண்டல்; இனிது அறல் காமம் புணர்தலின் ஊடல் இனிது" என உடலோம்பும் முறையையும் காதலையும் அவர் நயம்பட எடுத்துரைப்பது அவர் இவ்வுலகம் பற்றியே சிந்திக்கிறார் என்பதற்குப் போதிய சான்றாகும்.

பேராசிரியர் ப.மருதநாயகம் "அடுக்கு எனும் இலக்கியவுத்தி" என்னும் தலைப்பில் எழுதியுள்ள கட்டுரை பன்முறை படித்து இன்புறத்தக்கது.

மேலை நாட்டார் மொழி ஆராய்ச்சி, மொழிநூல், சொற்பொருள் ஆய்வு, இலக்கியத் திறனாய்வு பார்வையுடன் புதிய யுகத்தில் சிந்தித்துப் பல்வேறு நிறுவனங்களை ஏற்படுத்தி மொழி ஆராய்ச்சி செய்து வருகின்றனர். கோலரிட்சு என்னும் அறிஞர் ஆங்கில மொழி அறிந்த அனைவராலும் நன்கு அறியப்பட்டவர். அப்பெரியார் தாம் எழுதிய இலக்கிய வரலாற்று நூலில் மேலைநாட்டுக் கவிதையுலகம்

சொல்லைப பயன்படுத்தும் முறையில் குறைபாடு உள்ளதைச் சுட்டிக் காட்டுகின்றார். நூலாசிரியன் பொருளொடு புணர்ந்து சொல்லைப் பயன்படுத்தும் தகுதியினாலேயே காலம் கடந்து படிப்பவர் மனத்தில் இடம பிடிக்கின்றான்.

சொல் பொருள் உணர்த்தும் மரபு, முறை குறித்து சிந்தித்து அதற்கு இலக்கணம் கண்டு இலக்கியப் படைப்பை வளப்படுத்தியுள்ளனர். தொல்காப்பியர் "எச்சவியலில்" சொல்லடுக்கு குறித்துப் பேசி இருப்பது குறிப்பிடத்தக்கது. ஆசிரியன் சொல்லை அடுக்குவதற்குரிய மரபு இசைநிறை, அசைநிலை, பொருளொடு புணர்தல் குறித்து இருத்தல் வேண்டும் என்பதை எடுத்துரைப்பது இலக்கிய ஆசிரியர்கள் சொல்லைப் பயன்படுத்துவதற்கும் இலக்கியப் படைப்புக்கும் இன்றியமையாத செய்தியாகும்.

சங்க இலக்கியம், திருக்குறள், சிலம்பு, பக்தி இலக்கியம், பாரதி என இலக்கிய வரலாற்றில் தடம் பதித்த கவிஞர் அனைவரும் சொல்லைப் பொருள் விளக்கத்திற்காகவும் சொல்லும் பொருளின் அழுத்தத்திற்காகவும் சொல்லடுக்கைப் பயன்படுத்தியுள்ளதைக் கட்டுரை படிக்கும் வாசகன் கற்று இன்புறத்தக்கது. சொல்லை அடுக்கியிருக்கும் நுட்பத்தை உரைஆசிரியர்கள் ஆங்காங்கு எடுத்துரைத்திருக்கும் திறம் உரையாசிரியர்கள் ஒரு திறனாய்வாளர்கள் என்பதை ஆசிரியருடைய கட்டுரை நமக்கு நன்கு உணர்த்துகிறது.

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்

என்னும் திருக்குறளை விளக்கும் உரைஆசிரியர் பரிமேலழகர் "அடுக்குகள் பன்மை குறித்து நின்றன" என்பதோடு நிற்காமல் அதற்கு அளிக்கும் பொருள் விளக்கம் பரிமேலழகரின் நுட்ப அறிவைப் புலப்படுத்தும். ஆசை காலம் தோறும் மாறுபடும்; ஒவ்வொரு பொருளின் மீதும் பற்றும் துன்பமும் தோன்றும்; அதனால் மனிதன் ஒவ்வொன்றாக விட்டு விடுகின்றான். துறவின் சிறபபு எல்லாப் பொருள்களின் மீதுள்ள பற்றையும் ஒருங்கே விடுதல் என்னும் துறவின் உண்மையைப் பரிமேலழகர் விளக்கும் திறம் நுண்ணிதின் உணர்தற்குரியது.

இதுபோன்ற பல செய்திகளைத் தமிழ் இலக்கியப் பரப்பு முழுவதிலிருந்தும் ஆசிரியர் எடுத்துரைத்துத் தமிழ் இலக்கியம் செவ்வியல் மரபு சார்ந்தது என்பதை உணர்த்தும் திறம் போற்றுதற்குரியது'.

சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா

முதுமுனைவர் **இரா.இளங்குமரன்**

15. தனி மகனார்

ஒருவன் எவரும் இல்லாமல் தான் மட்டும் இருப்பது 'தனிமையாகும்'. ஆய்வர் - அறிவர் - துறவர் - தனிநிலை வேறு: அது, இனிமைமிக்கது.

'இனிது இனிது ஏகாந்தம்(தனிமை) இனிது'

என்பது அவலக் கவலைக்கு ஆட்பட்டு ஆற்றுவார் அற்றுப் புலம்பும் நிலைத் தனிமை இரங்கத் தக்கதாம். அதனையே,

'புலம்பே தனிமை'

என்றார் தொல்காப்பியர்(814).

திருமணம் ஆகாதவனைத் **'தனிக்கட்டை'** என்பது மக்கள் வழக்கு. நாலாயிரப் பனுவலில் **'தனியன்'** என ஒரு சொல்வரும். ஒப்பற்ற என்ற பொருளும் 'தனி' என்பதற்கு உண்டு.

சிங்கள வெறியர்களின் கொலை வெறியால் இறந்தவர் ஒழிய உயிர் தப்பினால் போதும் எனப் புலம் பெயர்ந்து தப்பியவர் வீடு ஒன்று. அதில் ஒரே ஒரு முதியர் அவர் தம் குடும்பத்தவரைக் காண-செய்தி அறிய-அலமரல்; ஒரு நாடகம். அதனை நினைவுபடுத்துவதாக அமைந்துள்ளது ஒருபாட்டு. பாடியவர் பெயர் அறியவராமையால், 'பாழ்காத்திருந்த தனிமகன் போன்றே' என்று வரும் தொடரால் 'தனிமகனார்' எனப் பெயர் பெற்றவர் இவர்.

குணகடல் முகந்து குடக்கேர்பு இருளி
மண்திணி ஞாலம் விளங்கக் கம்மியர்
செம்புசொரி பானையின் மின்னி எவ்வாயும்
தன்தொழில் வாய்த்த இன்குரல் எழிலி
தென்புல மருங்கில் சென்றற் றாங்கு

நெஞ்சம் அவர்வயின் சென்றெனை ஈண்டொழிந்து
உண்டல் அளித்தென் உடம்பே விறற்போர்
வெஞ்சின வேந்தன் பகையலைக் கலங்கி
வாழ்வோர் போகிய பேரூர்ப்
பாழ்காத் திருந்த தனிமகன் போன்றே! (நற்.153)

பிரிவிடை மெலிந்த தலைவி சொல்லியது.

"கீழ் கடலில் படிந்து அதன் நீரைப்பருகி மேற்குத் திசையை நோக்கி எழுந்து இருண்டு, மண்ணுலகம் வளம் பெற, கம்ம வினைஞர் செம்பை உருக்கிச் செய்யும் பானை போல மின்னி, எவ்விடத்தும் தன் பெய்தல் தொழிலைச் செய்தக் கருமுகில், தென்திசைக்குச் சென்றது போல, தலைவர் உடன் உறைந்த போது நம்முடன் இருந்த நெஞ்சம் அவர் சென்ற இடத்திற்கே சென்று அவரோடு கூடிவிட்டது. ஆயினும் என்னோடே இருக்கும் உயிர் போகாமல் இருப்பது இரங்கத் தக்கது. கொடிய சின மிக்க வேந்தன் பகைமையால் அலைத்து வருத்தத் தம் வாழ்வும் வளமும் இழந்த மக்கள் ஒரு மொத்தமாக ஓடிப்போகிய பேரூர்க்கண் உள்ள பாழ்பட்ட மனைகளைக் காக்கும் ஒற்றை ஒருவன் போல யான் உள்ளேன்" என்று தலைவனைப் பிரிந்து துயருறும் தலைவி தோழிக்குக் கூறியது இதுவாகும்.

அவர்நெஞ்சு அவர்க்குஆதல் கண்டும் எவன்நெஞ்சே
நீஎமக்கு ஆகா தது (1291)

கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல். (1293)

என்னும் **நெஞ்சொடு புலத்தல்** குறள்கள் நினையத் தக்கன.
அரும்பொருள்: குணகடல்-கீழ்கடல்; குடக்கு-மேற்கு; கருமுகில்; தெனபுலம் - தென்பக்கம்; அவர்வயின் - அவரிடம்; அளித்து-இரங்கத்தக்கது; பாழ்-பாழிடம்.

திருவள்ளுவர் சமயச்சார்பு அற்றவர்

பேராசிரியர் இ.கி.இராமசாமி
மேனாள் தமிழ்த்துறைத்தலைவர்,
யாதவர் கல்லூரி,
மதுரை – 17.
கைபேசி: 9842008954

1.0. முன்னுரை

திருவள்ளுவரின் சமயம் என்ற தலைப்பில் 16-ஆம் ஆண்டு (2021) திருக்குறள் கருத்தரங்கை நடத்தும் பொறியாளர் க.சி. அகமுடைநம்பி ஊழையும் உப்பக்கம் கண்டவர். திருக்குறள் ஆராய்ச்சியில் தடம்பதித்த இந்தப் பெருமகன் வாழ்க நலமுடன். தமது ஊதியம், ஓய்வூதியம் ஆகியவற்றில் ஒரு பகுதியைத் திருக்குறள் ஆராய்ச்சிக்கு ஒதுக்கித் தமிழ்ப்பணி ஆற்றி வருகின்றார்.

1.1. கல்லாடம்

சங்ககாலப் புலவர் கல்லாடர்; பதினோராம் திருமுறை பாடிய கல்லாட தேவ நாயனார்; தொல்காப்பியத்திற்கு இடையியல் ஒரு பகுதிவரை உரை எழுதிய கல்லாடர்; சிவபெருமானின் திருவிளையாடல்கள் 64 என்று முதலில் தொகுத்துக் கல்லாடம் என்ற நூலை யாத்த கல்லாடர்; திருவள்ளுவமாலையில் இடம் பெறும் கல்லாடர்; என்று பலர் உள்ளனர். இவர்களுள் சைவநெறி ஓங்கிடக் கல்லாடம் என்ற சிவத்தலத்தில் இருக்கும் இறைவனாகிய தட்சிணாமூர்த்தியைப் பாடியக் கல்லாடர் திருக்குறளையும் வள்ளுவரையும் சரியாக மதிப்பீடு செய்து காட்டிய பெருமைக்கு உரியவர். கல்லால மரத்தின் கீழ் அமர்ந்திருக்கும் சிவபெருமானைப் பாடியவர் பழுத்த சைவர் என்னும் உண்மையைச் சொல்லத் தேவையில்லை. கி.பி.11-ஆம நூற்றாண்டில் சமணரோடும் பவுத்தரோடும் சைவசமயத்தார் பூசல் கொண்டு முரண்பட்டு நின்ற காலச்சூழ்நிலையில் வள்ளுவரை உலகாயதவாதி (பொருள்முதல்வாதி) என்றும், அவர் சமயவாதிகளின் சிந்தனை வழியில் செல்லாதவர் என்றும், தனித்தன்மையுள்ளவர் என்றும், உலக இயற்கையை, யதார்த்தத்தைப் பாடியவர் என்றும் முடிவு கூறியுள்ளார் கல்லாடர்.

சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது என்ற
வள்ளுவன் தனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்
(கல்லாடம், பாடல் 13)

சிவபெருமானின் திருவிளையாடல்களையும் பெருமைகளையும் போற்றும் நூல் கல்லாடம். அந்நூலே வள்ளுவரைச் சமயஞ்சாராத நடுநிலையாளர் என்று சொன்னபின்பு வேறு என்ன சான்று வேண்டும்.

1.1.1. கல்லாடனார்

கல்லாடரின் கருத்தையே உள்வாங்கிச் சற்றே விரித்துப் பாடினார் திருவள்ளுவமாலைக் கல்லாடனார். வேதம், சமணம், பவுத்தம், ஆசீவகம் என்ற வடநாட்டுச் சமயங்களும் கிறித்துவம், இசுலாம் போன்ற வெளிநாட்டுச் சமயங்களும் பரம்பொருள் ஒன்றே என்று சொன்னால் அது பல என்ப; பல என்று சொன்னால் அது அப்படி இல்லை என்ப. இந்த ஆறு சமயத்தாரும் சொன்னால் அது அப்படி இல்லை என்ப. இந்த ஆறு சமயத்தாரும் ஒத்துக்கொள்ளும்படியாக முப்பால் விளங்குகின்றது என்றார் கல்லாடனார். 'திருவள்ளுவ மாலை'யில (பா.9)

ஒன்றே பொருள்எனின் வேறு என்ப; வேறு எனின்
அன்று என்ப ஆறு சமயத்தார் - நன்றென
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி

என்றார்.

1.1.2. சுப்பிரமணிய பாரதியார்

கல்லாடம், திருவள்ளுவமாலை ஆகிய இரண்டிலும் வரும் அடிக்கருததை அபபடியே ஏற்றுக்கொண்ட புத்துலகக் கவிஞர் பாரதியார் திருக்குறளை உலக இலக்கியம் என்று முழங்கினார்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

இசசெந்தமிழ் முழக்கம் இன்று உலகெங்கும் பரவி வருவதைப் பார்த்து மகிழகின்றோம்.

1.1.3. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை

இந்திய மண்ணில் வலுப்பெற்றுள்ள வேதநெறி சார்ந்த மநுதர்மத்தோடு திருக்குறளை ஒப்பிட்டுக் காட்டியவர் மனோன்மணியம் நாடகத்தைப் படைத்த பேராசிரியர் சுந்தரம்பிள்ளை. சமற்கிருதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் புலமை மிக்கவர். தத்துவங்களைக் கற்றுத் தேர்ந்தவர். இவர் எவரிடத்திலும் எம்மொழியிடத்திலும் வெறுப்பில்லாத நடுவுநிலையாளர். தாம் உணர்ந்த உண்மையைத் தமது நாடகத்தின் தொடக்கத்திலேயே பாடி வைத்துள்ளார். திருக்குறளைக் குற்றமற நன்றாகக் கற்றுணர்ந்தவர்கள் ஒவ்வொரு குலத்துக்கும் வெவ்வேறு நீதி வகுத்துச் சொல்லும் மநுதர்மம் போன்ற நூல்களை எண்ணிப் பார்ப்பார்களா? என்று கேட்டார்.

வள்ளுவர்செய் திருக்குறளை மறுஅற நன்கு உணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநு ஆதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி

1.2. தனிச்சிறப்பு

உலகமக்களுக்குப் பொது நீதியை வழங்கிய தனிச்சிறப்புக்கு உரியவர் திருவள்ளுவர். அதனால் அவருக்குப் பின் தமிழில் தோன்றிய இலக்கியங்களில் குறளின் கருத்துகளும், சொற்களும், சொற்றொடர்களும் ஏறியுள்ளன. பின்வந்த சைவர்கள், வைணவர்கள், சமணர்கள், பவுத்தர்கள், கிறித்துவர்கள், இசுலாமியர்கள் யாவரும் தங்களுக்கு வேண்டியவற்றைத் திருக்குறளிலிருந்து அள்ளிக்கொண்டனர். அரசியல்வாதிகள், சீர்திருத்தவாதிகள், மதவாதிகள், மத எதிர்ப்பாளர்கள், பகுத்தறிவுவாதிகள், வகுப்புவாதிகள், தேசியவாதிகள் யாவரும் தங்களுக்கு வேண்டியவற்றைத் திருக்குறளிலிருந்து அள்ளிக் கொண்டனர். (சாமி. சிதம்பரனார், வள்ளுவர் வாழ்ந்த தமிழகம், ஜனசக்தி பிரசுராலயம், சென்னை,1956, ப.20)

1.2.1. நம்பிக்கைகள்

அவா கையாண்ட, ஆதிபகவன்(1), பறறறறான் (350) உலகு இயற்றியான் (1062), தெய்வம் (55,619) ஆகிய சொற்கள் அவரை ஓர் இறை நம்பிக்கையாளர் என்பதைக் காட்டுகின்றன. ஊழின் வலிமை, மறுபிறப்பு, இவ்வுலகம், மேலுலகம், வீடு (வானோர்க்கும் உயர்ந்த உலகம் புகும் - 346) துறவு, ஏழுபிறப்பு ஆகியவற்றை அவர் மறுத்துப் பேசவில்லை. இந்திரன், அடியளந்தான், தாமரைக் கண்ணான், மாமுகடி - மூதேவி, தவ்வை, தாமரையினாள் - சீதேவி, செய்யவள், கூற்றம்(யமன் - 269, 326, 894, 1083, 1085) போன்ற புராணத் தகவல்களைப் பொருள் புலப்பாட்டுக்குப் பயன்படுத்திக்கொண்டார். பேய், அலகை, தாக்கணங்கு போன்ற மக்கள் நம்பிக்கை சார்ந்தவற்றையும் உவமைகளாக, உருவகங்களாகக் கையாண்டார்.

1.2.2. வெல்லமுடியும்

ஊழ்பற்றி ஓர் அதிகாரத்தில் பேசிய திருவள்ளுவர் அதனை எதிர்கொள்ள வேண்டிய வழிமுறைகளைப் பற்றி ஊக்கம் உடைமை, மடியின்மை, ஆள்வினை உடைமை, இடுக்கண் அழியாமை ஆகிய நான்கு அதிகாரங்களில் விளக்கியுள்ளார். எனவே திருவள்ளுவருக்கு மக்களின் நம்பிக்கைகள் குறித்த ஆழமான புரிதல் இருந்தது என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. நல்வினை, தீவினை, மறுபிறப்பு, ஊழ்வினை, நரகம், சொர்க்கம் ஆகியவை குறித்த நம்பிக்கைப் பொதுவாக எல்லாச் சமயத்தாருக்கும் உணடு. இந்த வகையில் வைதிக நெறியையும அவைதிக நெறியையும் வேற்றுமைப்படுத்திப் பார்க்க முடியாது.

1.2.3. வேதம், வேள்வி

வேதம், வேள்வி ஆகியவற்றை வள்ளுவர் முதன்மைப்படுத்திப் பார்க்காமல் முறையே ஒழுக்கத்தையும், கொல்லாமையையும் முதன்மைப்படுத்திக் காட்டினார். நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால் வேதமும வேள்வியும் வேண்டாம் என்று சொல்லவில்லை. அவற்றைவிட ஒழுககமும் கொலலாமையும் உயர்ந்தவை என்றார்.

மறப்பினும் ஓத்துக் கொளல்ஆகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும். (134)

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உ்யிர்செகுத்து உண்ணாமை நன்று. (259)

1.2.4. சமயச் சாயல் உள்ளது

பாவலர்மணி ஆ.பழனி தமது ஆராய்ச்சி நூலாகிய **திருக்குறள் உரைகளும் சில குறைகளும்** என்ற நூலில் திருக்குறளில் சமயச்சாயல் உள்ளது என்ற தாம் கண்டறிந்த முடிவினைப் பதிவு செய்துள்ளார். சமண, பவுத்த மதங்களின் சாயல் உள்ளது. அதேசமயம் அவர் அம்மதங்களின் கொள்கைகளோடு முரண்படவும் செய்கின்றார் என்பது ஆ.பழனி அவர்கள் கண்ட உண்மை.

சமணமும் ஆசீவகமும் வினைக் கோட்பாட்டைக் கடுமையாக வலியுறுத்துகின்றன. வினையை அனுபவித்தே ஆக வேண்டும். **ஊழிற் பெருவலி யாவுள? (380)** என்று கேட்ட வள்ளுவர், **ஊழையும் உப்பக்கங் காண்பர் (620)** என்று முரண்பட்டு நிற்கின்றார்.

ஒரு பொருளின் தன்மை எதுவாக இருந்தாலும் அதனுடைய உண்மைத் தன்மையைக் கண்டறிய வேண்டும் என்ற புத்தரின் அறிவுக்கோட்பாட்டை ஏற்றுக்கொள்கிறார் வள்ளுவர். புத்தமதம்,

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும் (260)**

என்கிறார். 'ஆசையே துன்பத்திற்கு மூலகாரணம்' என்று புத்தர் சொல்லியதை அப்படியே ஏற்றுக்கொண்டு அதனோடு அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகியவற்றையும் சேர்த்துச் சொல்லுகின்றார். ஆசைக்கு முதலாவதாக மனித மனத்தைக் கெடுக்கும் ஒன்று உள்ளது; அது அழுக்காறு. அதாவது பிறரைக் கண்டு பொறாமைப்படுதல். பொறாமையின் அடுத்தநிலை ஆசை; ஆசையின் அடுத்த நிலை வெகுளி; வெகுளியின் அடுத்த நிலை கடுஞ்சொல் என்றார்.

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம் (35)

வைதிக நெறியைப் பொருத்தமட்டில் அது நால்வருணப் பாகுபாட்டை வலியுறுத்துகிறது. மனிதர்கள் பிறப்பினால் ஒத்த தன்மையும் சமன்மையும் உடையவர் அல்லர் என்கிறது. ஆனால் வள்ளுவர் எல்லாரும் சமம் என்றார். மனிதர்களை எந்த வகையிலும் பிரித்து வைப்பதை வள்ளுவர் ஏற்றுக் கொள்ளவில்லை. (ஆ.பழனி, திருக்குறள் உரைகளும் சில குறைகளும், பக். 5-8)

1.3. வள்ளுவரைச் சமயத்துக்குள் இழுத்தவர்கள் உரையாசிரியர்கள்

ஒரு தனிப்பாடல், திருக்குறளுக்கு உரைசெய்த பதின்மர் பட்டியலைத் தருகின்றது. அவர்கள்: தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காலிங்கர் ஆகியோராவர். மணக்குடவர், பரிதி, பரிப்பெருமாள், காலிங்கர், பரிமேலழகர் ஆகிய ஐவர் உரைகள் கிடைத்து அச்சேறியுள்ளன.

1.3.1. பரிதியார்

திருக்குறளைப் பரிதியார் சைவ சமயத்துள் அடக்க முயன்றுள்ளார் 'நற்றாள்' (2) என்பதற்குச் சிவன் ஸ்ரீபாதம் என்றும் 'பொருள்சேர் புகழ்' (5) என்பதற்குச் சிவகீர்த்தி என்றும் 'அறவாழி அந்தணன்' (8) என்பதற்குப் பரமேசுவரன் என்றும் பொருள் கூறுவார். 'எண் குணத்தான்' (9) என்பதற்கு அனந்த ஞானம் முதலான எட்டுக் குணங்களையுடைய இறைவன் என்றும் சொல்லிச் சைவ சமயத்தில் சேர்க்க முனைந்தார்.

1.3.2. மணக்குடவர்

மணக்குடவர் வள்ளுவரைச் சமணத்துள அடக்க முயன்றார். 'ஆதிபகவன்'(1) என்பதற்கு 'ஆதியாகிய பகவன்' என்றும் 'தன்னுயிர் தானறப் பெற்றானை' (268) என்பதற்கு, 'உயிர் என்றது சலிப்பற்ற அறிவை; தான் என்றது சீவனாகி நிற்கின்ற நிலைமையை; தானறுதலாவது என்பதற்கு 'அகங்காரம் அறுதல்' என்றும் 'மலர்மிசை ஏகினான்' (3) என்பதற்கு 'மலரின் மேலே நடந்தான்' என்றும் 'வகுத்தான்' (377) என்பதற்கு, 'விதானம் பண்ணினவன' என்றும் பொருள்கூறி வள்ளுவரைச் சமண சமயத்தவராகப் பார்த்தார்.

1.3.3. பரிமேலழகர்

பதின்மருள் இறுதியாக உரை எழுதிய பரிமேலழகர் வள்ளுவரை வைணவ சமயத்தார் என்றார். 'அடியளந்தான்' (610) என்பதற்குத் தன் அடியளவானே எல்லா உலகையும் அளந்த இறைவன் என்றும் 'தாமரைக் கண்ணான் உலகு' (1103) என்பதற்குத் 'துறந்த யோகிகள் எய்தும் செங்கண்மால் உலகம்' என்றும் பொருள் எழுதினார். 'பற்றற்ற கண்ணே' (349) என்பதற்கு 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்னும் திருவாய்மொழிப் பாசுரத்தைச் (1,2,5) சான்று காட்டினார். அதேபோல் 'ஆரா இயற்கை' (370) என்ற தொடருக்கு நன்றாய ஞானம் கடந்துபோய் என்ற திருவாய்மொழிப் (76-6) பாசுரத்தைச் சான்று காட்டினார். முறை செய்து காப்பாற்றும் மன்னனுக்குத் 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேன்' என்ற ஆழ்வாரின் பாசுரப் பகுதியைச் சுட்டி விளக்கினார்.

அதேபோலத் திருவள்ளுவமாலையில் பாடிய பலரும் தத்தம் சமயத்தில் வள்ளுவரைச் சேர்த்துக் கொள்ள முயன்றுள்ளனர்.

1.3.4.. சிவிகை பொறுத்தானும் ஊர்ந்தானும்

போன பிறவியில செய்த பாவம், புண்ணியம் ஆகியவற்றுக்குத் தக்கவாறு இந்தப் பிறவி அமையும் என்ற நோக்கத்தில்,

அறத்தாறு இதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை (37)

என்ற குறளுக்குப் பரிமேல்ழகர் உரை எழுதினார். 'அறத்தின் பயன் இது என்று யாம் ஆகமயளவையான் உணர்த்தல் வேண்டா; சிவிகையைக் காவுவானோடு (தூக்குவானோடு) செலுத்துவானிடைக் (ஏறிச்செல்லுவோன்) காட்சியளவை தன்னாலே உணரப்படும். அதாவது, ஆகமத்தைச் சுட்டிக் காட்டிப் பாவ புண்ணியத்தின் பயனைச் சொல்ல வேண்டியதில்லை; பல்லக்கைத் தூக்கிச் செல்லுபவனையும் பல்லக்கில் அமர்ந்து செல்லுபவனையும் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். போன பிறவியில் பாவம் செய்தவன் இப்பிறவியில் பாவத்தைச் சுமக்கிறான். புண்ணியம் செய்தவன் இப்பிறவியில்

சுகத்தைச் சுவைக்கிறான். இவ்வுரையினை மறுத்தார் சிவப்பிரகாசர்; திருப்பூந்துருத்தியில் ஞானசம்பந்தரை நாவுக்கரசர் பல்லக்கில் அமர்த்தித் தூக்கிச்சென்றார். அக்காட்சியை வைத்துப் பாவம் செய்தவர் நாவுக்கரசர், புண்ணியம் செயதவர் ஞானசம்பந்தர் என்று எடுத்துக் கொள்ளாமல் **இருவரும் உயர்ந்தவர்களே** என்று எடுத்துக் கொள்ள வேண்டும் என்றார் சிவப்பிரகாசர் (நால்வர் மணிமாலை, பாடல் - 33). இந்த இருவர் உரைகளும் ஏற்க முடியாதவை. பல்லக்கைத் தூக்கிச் செல்லுவோனையும் அதில் அமர்ந்து செல்லுவோனையும் வைத்து அறத்தின் தன்மையைப் புரிந்து கொள்ள வேண்டாம் என்பதே வள்ளுவர் உள்ளம். அது பாவபுண்ணியத்தைக் காட்டும் காட்சி என்று பரிமேலழகர் சொல்லியது பொருத்தமற்ற உரை. 2500 ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்ட குறளுக்கு, இன்றைக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சிவப்பிரகாசரும், அவருக்கு முன்பு வாழ்ந்த பரிமேலழகரும் செய்தவை உரையா? இல்லை, குறளுக்குப் போட்டத் திரையா? என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

1.3.5. அய்ந்து அவித்தான்

அதேபோல் பொறிபுலன்களை அடக்கி வாழ்ந்தமைக்கு இந்திரனைக் கூறுவதும், கப்பத்து இந்திரன் என்று வேறோர் சமணத் தலைவனைக் கூறுவதும் பொருத்தமற்றவை. குறளின் பாடாந்தரத்தை மாற்றிக் கொண்டால் பொருள் நேராகி விடும். 'அய்ந்து அவித்தான்'(25) என்பதை '**அய்ந்து அவியாதான்**' என்று மாற்றிக் கொண்டால் போதுமானது.

1.4. அறக்கோட்பாடு

வைதிகமோ, சமணமோ, பவுத்தமோ அறக்கோட்பாட்டுக்கு வரைவிலக்கணம் செய்து காட்டவில்லை. ஆனால் வள்ளுவர், 'அறம்' என்பது இன்னது என்று விளக்கிக் காட்டியுள்ளார். மனத்தில் மாசு இல்லாத தூயநிலையே அறம் என்று சொல்லி விட்டார். மனத்தில் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகிய நான்கு இழுக்காறுகளும் இல்லாதநிலை அறம் என்றார் அதனையும் சுருக்கி 'மனததுக்கண் மாசிலன் ஆதல அனைத்து அறன்' (34) என்று வரைவு செய்து காட்டிவிட்டார். இவ்வளவு சிந்தனைத் தெளிவு வேறு எவரிடமும் இல்லை.

1.4.1. பல்லுயிர் ஓம்புதல்

சமயவாதிகளும் பிற நூல் இயற்றியவர்களும் கொல்லாமை பற்றிச் சொல்லியவற்றையெல்லாம் தாண்டிப் **'பல்லுயிர் ஓம்புதல்'** (322) என்ற தத்துவத்தை முன்மொழிந்துள்ளார். வள்ளுவர் பகுத்துண்டு எல்லா மக்களையும் காப்பாற்றுதல் என்ற பொருளில் மட்டும் அது அமையவில்லை. அது இன்னும் ஆழமான, அகலமான பொருளைத் தருகின்றது. பல உயிரினங்களையும் காப்பாற்றுதல், வாழவிடுதல் என்ற அறத்தைப் பேசுகின்றது. உயிரினங்களை வேட்டையாடி இயற்கைச் சமநிலையைச் சிதைக்கக் கூடாது (Destruction of ecological balance) என்பது அவர் உணர்த்தும் உண்மையான பொருள்.

1.5. உழவுத்தொழில்

வைதிகம் வேதத்தை உயர்வு என்றது. சமணம் துறவைப் போற்றியது. புத்தம் ஆசையை விட்டு விடச்சொன்னது. வள்ளுவர் உழவுத்தொழிலே உயர்வு என்றார். அதற்கான காரணகாரியத்தையும் சொன்னார். நிலத்தை உழுதால் அதில் உள்ள நுண்ணுயிர்கள் இறந்துபோகும். அந்த பாவம் உழுவோரைச் சேரும் என்றது சமணம். சமணத்திற்கு மாறான சிந்தனையை உழவுத்தொழில் மூலம் உணர்த்தினார் வள்ளுவர். உழவுத்தொழில் செய்தால் வீடுபேறடையலாம் என்றோ, பிறப்பை அறுக்கலாம் என்றோ, மேலுலகம் கிடைக்கும் என்றோ வள்ளுவர் சொல்லவில்லை. எல்லாருக்கும் சோறு போட முடியும் என்றார். உழவுத்தொழில் பட்டினியைப் போக்கும் உயர்ந்த தொழில் என்று நிறுவிக்காட்டினார்.

உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கு நிலை (1036)

1.6. நிலையானது புகழ்

பிறப்பு, தூங்கி விழிப்பது போன்றது; இறப்பு, தூங்குவது போன்றது. செல்வம், யாக்கை ஆகியவை நிலையற்றவை. புகழ் ஒன்றுதான் நிலையானது என்பது வள்ளுவர் கோட்பாடு. துறவிகள் முடியை மழிக்கவும் வேண்டாம்; வளர்க்கவும் வேண்டாம். துறவியர்க்கு

அத்தகைய புறத்தோற்றங்கள் தேவையில்லை என்றார். மனத்தூய்மைதான் வேண்டும் என்றார் கள், களவு, சூது, பரத்தமை, புலால் உண்ணல், உயிர்க்கொலை செய்தல் ஆகியன கூடாது என்றார். இது அவர் சொல்லிய நீதிகள்; அவருடைய மதக்கோட்பாடு அன்று.

1.7. அன்பும் அறமும்

வள்ளுவர் ஒரு பண்பட்ட உயர்ந்த வாழ்வியலை அன்பு, அறம் ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைத்துக் காட்டியுள்ளார்.

'அன்பின் வழியது உயிர்நிலை' **(80)**

'அறத்தான் வருவதே இன்பம்' **(39)**

இவற்றுள் வரும் 'அறம்' என்ற சொல்லாட்சி, 'தர்மம்' என்ற சொல்லாட்சியைவிட விரிவும் பரப்பும் வீச்சும் மிகுந்தது என்கிறார் நா.சுப்பிரமணியன் (இந்தியச் சிந்தனை மரபு, சவுத் இந்தியன் புக்ஸ், சென்னை, 1993, ப.58). இவர், வள்ளுவர் கூறும் அன்புநிலையைச் சமண, பவுத்த மதங்களின் வழிவந்த கொள்கை என்று கருதுகின்றார். ஆனால் சமணமும் பவுத்தமும் சமயத்தளங்களிலிருந்தும் துறவுநிலையிலிருந்தும் அஹிம்சையைப் பேசின; அன்பைப் பேசின. வள்ளுவர் சமயத்தளத்திலிருந்து அன்பைப் பேசவில்லை. இல்லறநெறி நின்று, உலகியலைப் பார்த்து அனுபவித்ததைக் கொண்டு யதார்த்தமாகச் சொன்னார்.

1.7.1. அன்பின் ஐந்திணை

குறளின் காமத்துப்பால் புலப்படுத்தும் அகநிலை அன்பு, தமிழ் ஐந்திணை மரபின் வளர்ச்சி. காமத்துப்பால் பரத்தமையொழுக்கம் பேசவில்லை; தாமரைக்கண்ணான் உலகைவிட ஒருவன் அவனுடைய மனைவியுடன் துய்க்கும் இன்பம உயர்வானது என்றார் வள்ளுவர்.

தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு **(1103)**

வைகுண்டப் பதவி, மனைவியுடன் புணர்ந்து மகிழ்தலுக்கு ஈடாகாது என்று சொல்லி இவவுலக வாழ்வை நேசித்தார். கற்பனையுலகைப் புறந்தள்ளி நடப்பியலை முன் வைத்தார்.

1.8. இறைவனும் ஊழும்

வள்ளுவரால் சித்திரிக்கப்பட்ட இறைவன் எந்தச் சமய மரபுக்கும் உரியவரல்லர். அது நற்பண்புகளின் தொகுதி. ஊழ், மனிதனுடைய செயலூக்கம், அறிவாற்றல், அனுபவம் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்ட சக்தியாக, நம்பிக்கையாளர்களால் பார்க்கப்படுகின்றது. இயற்கை, நியதி, பால், முறைமை என்று பல்வேறு பெயர்களால் அதனைச் சுட்டுகின்றனர். ஊழை வள்ளுவர் மறுக்கவில்லை; அதனை எதிர்கொள்ள வழி சொல்லியிருக்கின்றார். சமயவாதிகள் சொல்லிய ஊழ்க்கொள்கை வள்ளுவரிடம் வலிமை பெறவில்லை. ‘ஊழையும் உப்பக்கம் காண்பர்’ (620) என்றார்; ‘தெய்வத்தான் ஆகாது’ (619) என்றார். இன்னும் ஒரு படி மேலே சென்று வறுமைக்கு இந்த உலகில் இடம் இருக்கும்படியாக உலகைப் படைத்தவன் அழிந்து போகட்டும் என்று வசை பாடினார்.

‘படைத்தோன் மன்ற அப்பண்பிலான்’ (197) என்று புறநானூற்றுப் புலவன் நொந்து கொண்ட தகவல் முன்னரே கிடைக்கின்றது.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் (1062)

வறுமை மிகுந்த உலகைப் படைத்தவனை அழிந்து போகும்படி எழுதிவைத்த வள்ளுவனுக்குச் சமயம் ஏது? வள்ளுவனுக்கு நெறிதான் உண்டு. மதம் கிடையாது. பூசையும் சடங்கும் அவருக்குத் தெரியாது.

1.9. நிறைவுரை

இறைவன், மேலுலகம், இவ்வுலகம், ஊழ், ஆட்சிமுறை, இல்லறம், துறவறம் ஆகியவைபற்றி வள்ளுவர் கூறியவை அவர் வாழ்ந்த காலச் சமூக நிலை ஆகும். ஆனால் அந்தச் சமூகம் பழைய நிலையிலிருந்து மாறி அன்பின் வழியான, அறத்தின் வழியான சமூகமாக மாறியாக வேண்டும் என்ற கருத்தாக்கத்தை வள்ளுவர் முன்னெடுத்தார். அவர் அன்பே கடவுள், அறமே கடவுள், உண்மையே கடவுள், அறிவே தெய்வம் என்றெல்லாம் சொல்லிக்குழபபவில்லை. மனத்தூய்மை, ஒழுக்கம், அறம், அன்பு, பண்புடைமை ஆகியவற்றைச் சமயத்தோடு சேர்த்துப் பார்க்கவில்லை. அவர் வழி தனி வழி; சமயச் சார்பற்ற வழி; சமயவரம்புகளைக் கடந்த ஓர் ஒப்பற்ற சித்தாந்தம். அதனால் அவர் இயற்றிய குறள் தமிழர் ஒழுக்கச் சட்ட நூலாக விளங்குகின்றது.

அடுக்கு எனும் இலக்கியவுத்தி

பேரா. ப.மருதநாயகம்,
ஆய்வு அறிஞர்,
நடுவண் அரசு செம்மொழி ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை – 600 113.
கைபேசி: 94427 87727

ஆங்கிலப் புனைவியல் கவிஞரும், தலைசிறந்த இலக்கியத் திறனாய்வாளரும், பெருங்கல்வியாளரும் ஆகிய கோலரிட்சு தமது Biographia Literaria எனும் நூலில் கவிஞன், கவிதை, கற்பனையாற்றல் ஆகியவை பற்றியெல்லாம் விரிவாகப் பேசியுள்ளார். வேர்ட்சுவொர்த்தின் பாடல்களையெல்லாம் ஆராய்ந்து அவற்றின் நிறைகுறைகளையெடுத்துச் சொல்லும்போது, ஒரு கவிதை "She fell down dead, she fell down dead, she fell down dead" என்று முடிவதைக் குறிப்பிட்டு அத் தொடரடுக்கு உரியமுறையில் தக்க சூழலில் பயன்படுத்தப் பெறவில்லையென்றும் அதனை நோக்கிக் கவிதை செல்லவில்லையென்றும் சுட்டிக்காட்டுவார். இதன் மூலம் ஒரு சொல்லோ, தொடரோ இரண்டு மூன்று முறை ஒரு கவிதையில் அடுக்கப்பெறும்போது கவிஞர்கள் எவ்வளவு திறனுடன் செயல்பட வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்டுவார். ஆனால் ஆங்கிலத்திலோ, பிறமேலைமொழிகளிலோ அடுக்கு எனும் இலக்கியவுத்தி எவ்வாறு கையாளப்படவேண்டுமென்பது பற்றிய விரிவான விளக்கம் எக்கவிஞராலும், திறனாய்வாளராலும், கவிதையியல் வல்லுநராலும் தரப்படவில்லை.

பேச்சுவழக்கில் உள்ள எல்லா மொழிகளிலும் ஒரு சொல் அடுக்குகள் இருத்தல் இயல்பே. ஆயினும் அவற்றின் பயன்பாடு பற்றிய ஆய்வைத் தமிழைத்தவிர வேறு மொழிகளில் காணல் அரிது. தொல்காப்பியத்து, "எச்சவியல்" ஒரு சொல்லே இரண்டுமுறை, மூன்றுமுறை அடுக்கி வருவதற்கான இலக்கண வரையறையை நான்கு நூற்பாக்களில் விளக்கும்.

இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தல் என்று
அவைமூன்று என்ப ஒரு சொல் அடுக்கே (411)

ஓரிடத்தில் ஒரு சொல் ஒன்றுக்குமேல் அடுக்கிவரும் அடுக்குத் தொடர் இசைநிறை, அசைநிலை, பொருளோடு பொருந்தி வருதல் என மூன்று வகைப்படும்.

இசைநிறை : ஏ ஏ ஏ ஏ அம்பல் மொழிந்தனள்

அசைநிலை : மற்றோ மற்றோ, அன்றே அன்றே

பொருளொடு புணர்தல் :

பாம்பு பாம்பு விரைவு

வைதேன் வைதேன் துணிவு

உண்டு உண்டு உடம்பாடு

போம் போம் - ஒரு தொழில் பலமுறை நிகழ்தல்

இசைப்படு பொருளே நான்கு வரம்பு ஆகும் (423)

ஒரு சொல் அடுக்குகளுள் இசை நிறைத்தற்காக வரும்சொல் நான்குமுறை அடுக்கிவரும் வரம்பு கொண்டதாகும்.

பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ

விரைசொல் அடுக்கே மூன்று வரம்பு ஆகும் (424)

விரைவை உணர்த்தவரும் சொல் மூன்று முறை அடுக்கி வரும் வரம்பு கொண்டதாகும்.

தீ தீ தீ

விரைவை உணர்த்தவரும் சொல் மூன்று முறைக்கு மேல் அடுக்கி வராது என்பதைக் **குசேலோபாக்கியானம்** நூல் ஆசிரியர் அழகாகப் பயன்படுத்திக் கொள்வார். குசேலர் வாயிலில் வந்து காத்திருக்கிறார் என்ற செய்தியைக் காவலர்கள் கண்ணனிடம் தெரிவித்தவுடன் கண்ணன் மகிழ்வோடு அவரை உடன் அழைத்து வருமாறு காவலர்களைப் பணிக்கின்றான்.

"போயழைத் திடுமின் இன்னே, போயழைத் திடுமின் இன்னே, போயழைத் திடுமின் இன்னே" என்று விரைவுப்

பொருளில் சாற்றான், இலக்கணமின்மை நோக்கி இதற்கு மேல் சொற்றான் அல்லன்

கண்டீர் என்றா கொண்டீர் என்றா
சென்றது என்றா போயிற்று என்றா
அன்றி அனைத்தும் வினாவொடு சிவணி
நின்றவழி அசைக்கும் கிளவி என்ப (425)

கண்டீர், கொண்டீர், சென்றது, போயிற்று என்னும் நான்கு வினாச் சொற்களும் ஈற்றில் வினா எழுத்துகளோடு பொருந்தி நின்று, வினைச்சொல் பொருண்மையும் வினாச்சொல் பொருண்மையும் இன்றி அசை நிலையாக வரும்.

கண்டீரே கண்டீரே
கொண்டீரே கொண்டீரே
கேட்டை என்றா நின்றை என்றா
காத்தை என்றா கண்டை என்றா
அன்றி அனைத்தும் முன்னிலை அல்வழி
முன்னுறக் கிளந்த இயல்பு ஆகும்மே (426)

கேட்டை, நின்றை, காத்தை, கண்டை என்னும் நான்கு சொற்களும் முன்னிலைப் பொருள் உணர்த்தாவிடத்து மேற்சொன்ன கண்டீர் முதலாகிய சொற்களைப் போன்று அசை நிலைகளாக வரும்.

கேள் கேள், நில் நில், பொறு பொறு, பார் பார்

குறுந்தொகை, குறைந்த அடிகளைக் கொண்ட பாடல்களாலானதால் சொற்களை அளவோடு பெய்யும் கலையறிந்த புலவர்களே அதில் இடம பெற்றுள்ளனர். அன்னார் இன்றியமையாத தொடா அடுக்கையே கையாள்வர். பாடலின் முழுப்பொருளுக்கு அடுக்கின் தேவையையும் அது தரும் முருகியல இன்பத்தையும் பாடலை நுட்பமாக நோககுவார் உணரலாம்.

நோம்என் நெஞ்சே நோம்என் நெஞ்சே
இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற் கமைந்த நம் காதலர்
அமைவிலர் ஆகுதல் நோம்என் நெஞ்சே (4)

தலைவியைக் காணாதிருக்கும் தலைவன் பண்பற்றவனாகத் தோன்றுகின்றானே என்று கூறும் தோழிக்குத் தலைவி, உனது எண்ணத்தில் அவர் பண்பற்றவராகத் தோன்றுவது கருதி என் நெஞ்சம் வருந்துகின்றது என்று கூறுவாள். தலைவன் பண்புடையவனே என்பது அவள் நம்பிக்கை. அவன் வராததால் அவன்மீது அவள் கொண்டுள்ள காதல் எள்ளளவும் குறையவில்லை என்பதை "நோம் என் நெஞ்சே" என்னும் தொடரடுக்கு நன்கு புலப்படுத்தும்.

அகவன் மகளே அகவன் மகளே
மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே அவர்
நன்னெடும் குன்றம் பாடிய பாட்டே (23)

தலைவி, ஒருவனிடம் காதல் கொண்டிருப்பதால் அவள் உடலில் மாறுபாடுகள் காணப்படுகின்றனவென்றும் அதற்காக அகவன மகள் முருகனின் வரவை வேண்டுதல் தேவையில்லையென்றும் தலைவனின் குன்றத்தைப் பாடும்போதெல்லாம் தலைவி மகிழ்வதைக் கொண்டு இதனை உணரலாமென்றும் செவிலிக்குத் தோழி மறைமுகமாகத் தெரிவிக்கவே அகவன் மகளை மீண்டும் மீண்டும் விளித்துத் தலைவனின் குன்றத்தையே பாடுமாறு கேட்பாள். பாடுவதை நிறுத்திவிடுமாறு அகவன் மகளுக்குக் கட்டளையிடுவது பண்பற்ற செயலாகுமென்பதாலும், அவளைத் திரும்பவும் பாடச் சொல்லுதல் அவளுக்குக் களிப்பைத் தருமென்பதாலும், தான் கேட்பது பணிவான வேண்டுகோள் என்று அவள் எண்ணவேண்டு மென்பதாலும் தோழி விளியை மூன்றுமுறை அடுக்குகிறாள்.

காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்ற இவ்வுலகத்துப் பிறரே (44)

தலைவி, தலைவனுடன் சென்றுவிட செவிலித்தாய் பாலைநிலத்தில் நெடுந்தூரம் நடந்து செல்கின்றாள். அவளுடைய கால்கள் தள்ளாடுகின்றன. வருவோர் போவோரையெல்லாம் தலைவியும் தலைவனும் தென்படுகின்றார்களா என்று மீண்டும் மீண்டும் பார்க்கின்றாள். அதனால் அவளுடைய கண்கள் ஒளி இழக்கின்றன. தலைவி கிடைக்கவில்லையே என்ற வேதனையாலும் ஏமாற்றத்தாலும் சிலரையே பார்த்திருப்பாளாயினும் "நம்மைத்தவிர இவ்வுலகில் வாழ்வார் விண்மீன்களினும் பலராவார் போலும்" என்று எண்ணி வருந்துவாள் "நோக்கி நோக்கி" என்ற அடுக்கு அவள் உள்ளச் சலிப்பைப் புலப்படுத்தும்.

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்தலைச் சிதவலர்
நன்று நன்று என்னும் மாக்களோடு
இன்று பெரிதென்னும் ஆங்கண தவையே (146)

காதல் வயப்பட்ட தலைவனையும் தலைவியையும் மணம் செய்துவைக்க ஊர்ப்பெரியவர்கள் ஒன்றுகூடி ஒப்புக்கொண்ட நற்செய்தியைத் தோழி தலைவிக்கு உரைக்கிறாள். "அம்முதியவர்கள் கையில் தண்டு உடையவர்; நரைத் தலையில் முடியணிந்தவர். இன்று நல்ல நாள். அவர்கள் நல்லவர்கள், மிக மிக நல்லவர்கள்" என்று தோழி தன் உவகையைத் தலைவியோடு பகிர்ந்து கொள்கிறாள். நம்மூரில் இவ்வளவு நல்லவர்கள் இருக்கின்றார்களோ என்று ஐயமுறும் தலைவிக்கு அவர்கள் எவ்வளவு நல்லவர்கள் என்பதைத் தெரிவிக்க 'நன்று நன்று என்னும் மாக்கள்' என்னும் தொடரைப் பயன்படுத்துகிறாள்.

பார்ப்பன மகனே பார்ப்பன மகனே
செம்பூ முருக் கினன்னார் களைந்து
தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ உண்டிப் பார்ப்பன மகனே
எழுதாக் கற்பினின் சொல் உள்ளும்
பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்தும் உண்டோ மயலோ விதுவே (156)

தலைவியைப் பிரிந்திருக்கும் தலைவன் தன்னுடைய பார்ப்பன நண்பனைப் பார்த்து, "தண்டும் கமண்டலமும் ஏந்தி, உண்ணா நோன்பிருந்துப்பின் உண்ணும நண்பனே! எழுதாக்கிளவியாகிய உனது வேதத்தில் பிரிந்த காதலரைச சேர்த்து வைக்கும் மருந்து ஏதேனும் சொலலப்பட்டிருக்கிறதா?" என்று கேட்கிறான். விளிமூன்று முறை அடுக்குவது தலைவனின் பிரிவுத்துயர் எவ்வளவு கொடுமையானது என்பதைப புலப்படுத்தும்.

நோம்என் நெஞ்சே நோம்என் நெஞ்சே
புன்புலத் தமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்கின் புதுமலர் முட்பயந் தாஅங்கு
இனிய செய்த நம் காதலர்
இன்னா செய்தல் நோம்என் நெஞ்சே (202)

பரத்தையை நாடிச் சென்றுவிட்ட தலைவனைப் பற்றித் தலைவி தன் தோழியிடம், "நெருஞ்சி மலர்கள் பூக்கும்போது கண்ணுக்கு இனியனவாய்க் காட்சி தருகின்றன. ஆனால் பின்னால் அவற்றில் தோன்றும் முள் துன்பம் தருகிறது. எனக்கு இனிய செய்த காதலர் இப்பொழுது இன்னாதன செய்தல் என் நெஞ்சை நோகச் செய்கிறது" என்று கூறுவாள். அவள்படும் துன்பத்தைத் தொடரடுக்குத் தெளிவாக்குகிறது.

காமம் காமம் என்ப காமம்
அணங்கும் பிணியும் அன்றே நினைப்பின்
முதைச்சுவற் கலித்த முற்றா இளம்புல்
மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளோயே (204)

தான், ஒரு பெண் மேல் கொண்ட காதல் தன்னை மிகவும் துன்புறுத்துவதாகச் சொன்ன தலைவனிடம் பாங்கன், "காமம் என்பது அச்சுறுத்தும் அணங்கும் அன்று, நோயும் அன்று. அது எண்ணத்தில் விளையும் விருந்தாகும் முதிய பசு தன் நாவினால் இளம்புல்லைத் தடவித்துய்க்கும இனபத்தை ஒத்தது காமத்தால் பெறும் இன்பம்" என்று கூறுவான். 'காமம், காமம் என்று அஞ்சத்தேவையும் இல்லை, அதை இழி பொருளாகக் கருதவேண்டியதுமில்லை' எனற கருத்தை

வலியுறுத்த அச்சொல்லை இருமுறை அடுக்குவான் தலைவனின் தோழன்.

பேரூர் கொண்ட ஆர்கலி விழவில்
செல்வாம் செல்வாம் என்றி அன்றிவண்
நல்லோர் நல்ல பலவாற் றில்ல
தழலும் தட்டையும் முறியும் தந்திவை
ஒத்தன நினக்கெனப் பொய்த்தன கூறி
அன்னை ஓம்பிய ஆய் நலம்
என்னை கொண்டான் யாம்இன்ன மாலினியே (223)

தன்னை ஏமாற்றிவிட்ட தலைவனைப் பற்றித் தலைவி தன் தோழியிடம், "பேரூரில் நடந்த விழாவிற்குச் செல்வோம் செல்வோம் என்று என்னை வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றாய். அப்பொழுது நல்லவர்கள் பல நல்ல சொற்களையும் கூறினர். அங்கு நாம் பார்த்த தலைவன் தினைப்புனம் காக்கும் போது தேவைப்படும் தழலையும் தட்டையையும் என்னிடம் கொடுத்தான். ஆனால் பொய் பலகூறி என்தாய் எனக்களித்திருந்த நலனைப் பறித்துக் கொண்டான். இப்பொழுது என்னை இரங்குதற்குரிய நிலைக்கு ஆளாக்கிவிட்டான்" என்று கூறுவாள். தோழி வற்புறுத்தியதால்தான் செல்ல நேர்ந்தது என்பதைச் சுட்ட 'செல்வாம் செல்வாம்' என்று ஒரு சொல்லை இருமுறை அடுக்குவாள்.

வைகல் வைகல் வைகவும் வாரார்
எல்லா எல்லை எல்லவும் தோன்றார்
யாண்டுளர் கொல்லோ தோழி ஈன்டு இவர்
சொல்லிய பருவமோ இதுவே பல்லூழ்
புன்புறப் பெடை யொடு பயிறி யின்புறவு
இமைக்கண் ஏதா கின்றோ ஞெமைத்தலை
ஊனசைஇப் பருந் திருந்து உகக்கும்
வானுயர் பிறங்கல் மலையிறந் தோரே (285)

சொல்லிய காலத்தில் வராத தலைவனைக் குறித்து அவன் வரும் வழியில் உள்ள இடர்களை நினைந்து மனம்வருந்தும் தலைவி தோழியிடம், "அவர் பகலிலும் வாரார்; இரவிலும் வாரார். எங்கு

இருக்கின்றாரோ? அவா வருவேன் என்று சொல்லிச் சென்ற பருவம் இதுதான் ஆணபுறா பெண்புறாவோடு இன்புற்றிருக்க அதனை விடாது அழைத்துக கொண்டே இருக்கிறது. ஊன் உணவுக்காக ஞெமை மரத்தில் பருந்து ஒன்று அவா் வரும் வழியில் காத்திருக்கும்" என்று கூறுவாள்.

'பகலிலும் வருவதில்லை, பகல்முடிந்த இரவிலும் வருவதிலலை' என்ற தலைவியின் ஏக்கத்தை 'வைகல் வைகல்' என்ற அடுக்கும், 'எல்லை எல்லை' என்ற அடுக்கும் வலியுறுத்தும்.

காமம் தாங்குமதி என்போர் தாம் அஃது
அறியலர் கொல்லோ அனைமது கையர்கொல்
யாம்எம் காதலர்க் காணேம் ஆயின்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லா குதுமே (290)

பிரிவுத்துயா் தாங்காத தலைவி, தோழியிடம் 'காதல் நோயைப் பொறுத்துக்கொள்' என்று எனக்கு அறிவுரை கூறுபவர்கள் அதனைப்பற்றி ஏதும அறியாதவர்களா? அல்லது அதனைத் தாங்கிக்கொள்ளும் மனவலிமை பெற்றவர்களா? நான் என்னுடைய காதலரைக் காணாவிட்டால், வேதனை மிக்க உள்ளத்தோடு, பெரும் பாறையோடு மோதும் சிறு நுரை போன்று மெல்ல மெல்ல நாளும் இல்லாமல் போய்விடுவேன் என்றுரைப்பாள்.

'கல்பொறு சிறுநுரை' என்ற அரிய உவமையைக் கையாளும் புலவா், தலைவி நொறுங்கிய நெஞ்சத்தால் உயிரிழப்பாள் என்ற கருத்தை வற்புறுத்த மெல்ல மெல்ல் என்ற அடுக்கைத் தக்க இடத்தில் பெயகிறாா்.

சேரி சேர மெல்ல வந்துவந்து
அரிது வாய்விட்டு இனிய கூறி
வைகல்தோறும் நிறம்பெயர்ந்து உறையும் அவன்
பைதல் நோக்கம் நினையாய் தோழி
இன்கடும் கள்ளின் அகுதை தந்தை
வெண்கடைச் சிறுகோல் அகவன் மகளிர்

மடப்பிடிப் பரிசில் மானப்
பிறிதொன்று குறித்ததவ னெடும்புற நிலையே (298)

தலைவியை அடையவேண்டி ஒருவன் நாள்தோறும் வந்து செல்வதைத் தோழி அவனுக்கு இரக்கவுள்ளத்தோடு எடுத்துரைப்பாள். "அவன் ஒவ்வொருநாளும் மீண்டும் மீண்டும் நம்மிடத்திற்கு வருகிறான். இனிய சொற்களைப் பேசுகிறான். ஆனால் தன்விருப்பத்தைச் சொல்வதில்லை. துயரம் நிறைந்த கண்களோடு அவன் துன்புற்றுக் காணப்படுவதை நீ எண்ணிப்பார்க்க வேண்டும். அவன் நம் பின் வருவதற்குக் காரணம் வேறுண்டு. அது அகவன் மகளிர் அகுதையிடம் பெண்யானைப் பரிசிலை எதிர்பார்த்து இருப்பதைப் போன்றது.

'சேரிசேரி மெல்ல வந்துவந்து' என்ற வரி தலைவனின் பண்பட்ட நடத்தையை நுட்பமாக எடுத்துரைக்கின்றது.

சேறும் சேறும் என்றலின் பண்டைத்தம்
மாயச் செலவாச் செத்து மருங்கற்று
மன்னிக் கழிக என்றேனே அன்னோர்
ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ
கருங்கால் வெண்குருகு மேயும்
பெருங்குளம் ஆயிற்றுஎன் இடைமுலை நிறைந்தே (325)

இது பிரிந்து சென்ற தலைவனை எண்ணி வருந்தும் தலைவியின் கூற்று. "நான் செல்லப்போகிறேன், செல்லப்போகிறேன் என்று அவன் நாள்தோறும் சொல்லிவிட்டுச் செல்லவில்லையாதலால் 'செல்லப்போகிறேன்' என்று ஒருநாள் சொன்னபோது அது பொய்யென எண்ணி 'நீர் என்னைவிட்டு நீங்கலாம்' என்று சொல்லிவிட்டேன். அந்தோ! அவன் உண்மையிலேயே சென்று விட்டான். எனக்கு உறுதுணையாகத் தந்தை போன்றிருந்தவன் இப்பொழுது எங்குள்ளானோ! என் கண்ணீரால் என் மார்பு நிறைந்து விட்டது".

அவன் 'செல்வேன் செல்வேன்' என்று நாள் தோறும் சொன்னது அவளுக்குத் துன்பத்தையும் எரிச்சலையும் மிகுவித்திருக்குமாதலால் அதனை அடுக்கின் மூலம் கவிஞர் தெரிவிக்கிறார்.

மெல்லிய லோயே மெல்லிய லோயே
நன்னாள் நீத்த பழிதீர் மாமை
வன்பின் ஆற்றுதல் அல்லது செப்பின்
சொல்ல கிற்றா மெல்லிய லோயே
சிறியரும் பெரியரும் வாழும் ஊர்க்கே
நாளிடைப் படாஅ நளிநீர் நீத்தத்
திண்கரை பெருமரம் போலத்
தீதில் நிலைமை முயங்குகம் பலவே (368)

களவு நாள்கள் முடிந்து, திருமணம் உறுதியாகிவிட்ட நிலையில் தன் மகிழ்ச்சியைத் தலைவி தோழியிடம் தெரிவித்துக் கொள்கிறாள். "நல்ல நாளில் தலைவரோடு கூடினேன்; என் மாமை நீங்கியது. இவ்வூரில் அலர் தூற்றும் சிறியோரும் களவை ஏற்றுக் கொள்ளும் பெரியோரும் உள்ளனர். காதலருடைய அன்பு வெள்ளம் காரணமாக, ஆற்றின் திண்ணிய கரையில் நன்கு வேரூன்றியிருக்கும் பெருமரம் போன்று, எத்துன்பமும் இன்றி இருக்கிறேன்" என்பது தலைவி சொல்லும் செய்தி. திருமணம் முடிவானது பற்றிய அவளது பேருவகையைத் தெரிவிக்கத் தோழியை 'மெல்லியலோயே' என்று மூன்று முறை விளிக்கிறாள்.

ஊருண்கேணி உண்டுறைத் தொக்க
பாசி யற்றே பசலை காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்த லானே (399)

இது மருதத் தலைவியின் கூற்று. காதலரைக் கூடும போதெல்லாம் பசலை நீங்குதலையும் அவரைவிட்டுப் பிரிந்திருக்கும் போதெல்லாம் பசலை பரவுதலையும் கேணிநீரைக் கையால தொடும்போது பாசி நீங்குதற்கும் கைகளை எடுத்தவுடன் பாசி மீண்டும படிவதற்கும் இணையாகச் சொல்வாள் இரண்டு அடுக்குகளும் இரண்டு நிகழ்ச்சிகளின் விரைவை அருமையாக எடுத்துரைக்கும்.

புறநானூற்றுப் பாடல்கள சிலவற்றில் கேட்போரின் கவனத்தை ஈர்ப்பதற்காக விளித்தொடர் இரண்டு முறை அடுக்கப்படுகிறது. நரிவெரூவெத் தலையார் தமது பொருணமொழிக் காஞ்சித் துறைப்

பாடலில் 'பல்சான்றீரே! பல்சான்றீரே!' என்று இரண்டு முறை அடுக்குவதோடு அல்லாமல் 'கயல்முள் அன்ன நரைமுதிர் திரைகவுள், பயனில் மூப்பின் பல்சான்றீரே!' (195) என்றும் விளித்து அன்னாக்கு ஒரு வேண்டுகோள் விடுப்பார்.

பரிசில் துறைப் பாடலொன்றில் அவ்வையார் அதியமானின் வாயிலோனை, 'வாயிலோயே! வாயிலோயே! ... பரிசிலர்க்கு அடையா வாயிலோயே! (206) என்று விளித்து அதியமான் பரிசில் நீட்டித்திருப்பதைக் கண்டித்துப் பேசுவார்.

ஐயூர் முடவனார், சோழன் குளமுற்றுத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைப் புகழ்ந்து பர்டும் பாடலில் 'கலம் செயகோவே! கலம் செய்கோவே! ... நனந்தலை மூதூர்க்கலம் செய்கோவே' (228) என்று விளித்து அவனால் 'இருநிலம் திகிரியாப் பெருமலை மண்ணா வனைதல் ஒல்லுமோ, நினக்கே?' என்று கேட்பார்.

பூதப்பாண்டியன்தேவி பெருங்கோப்பெண்டு, 'பல்சான்றீரே! பல்சான்றீரே ... பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே' (246) என்று விளித்துத் தான் தீயில் மூழ்குவதினின்று தடுக்க வேண்டாமென்று அவர்களுக்கு அறிவுரை கூறுவார்.

பெயர் தெரியாத கவிஞர் ஒருவர், முதுபாலைத் துறைப்பாடலொன்றில் கணவனை இழந்த மனைவி ஒருத்தி, 'கலம் செய்கோவே! கலம் செய்கோவே! ... நனந்தலை மூதூர்க்கலம் செய்கோவே!' (256) என்று அழைத்துத் தன்னையும் தன் கணவனது உடலோடு சேர்த்துப் புதைக்கத் தாழி ஒன்றைச் செய்யுமாறு வேண்டுவதாகக் காட்சிப்படுத்துவார்.

ஆவூர் மூலங்கிழார் தானை மறத்துறைப் பாடலொன்றில் 'பல்சான்றீரே! பல்சான்றீரே! ... பாசறைப் பல்சான்றீரே' (301) என்று சான்றோரை விளித்து, கல்லென வேந்தூர் யானைக்கு அல்லது ஏந்துவன் போலான், தன் இலங்கிலை வேலே! என்று ஒரு மறவனின் புகழ் உரைப்பார்.

கோப்பெருஞ்சோழன். வடக்கிருந்தபோது பிசிராந்தையாருக்கும் தன்னருகே இடம் ஒதுக்குமாறும் அவர் உறுதியாக வருவாரென்றும்

கூறியவாறே அவர் வந்தது கண்ட பொத்தியார் அவ்வியப்பிற்குரிய வரலாற்றுச் செயதியைக் கையறு நிலைத்துறைப பாடலொன்றில் பதிவு செய்வார்.

வருவன் என்ற கோனது பெருமையும்
அது பழுது இன்றி வந்தவன் அறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே (217)

எருமை வெளியனார் குதிரை மறத்துறைப் பாடல் ஒன்றில் போர்க்களத்திலிருந்து குதிரைகள் பலவும் திரும்பிய பிறகும் தன கணவனின் குதிரை மட்டும் அவனைச் சுமந்து கொண்டு இன்னும் வரவில்லையே என்று ஏங்கித் தவிக்கும் மனைவியின் துயரைப் படம் பிடிப்பார்.

மாவா ராதே மாவா ராதே
எல்லார் மாவும் வந்தன; எம்இல்
புல்லுளைக் குடுமிப் புதல்வன் தந்த
செல்வன் ஊரும் மாவா ராதே
இருபேர் யாற்று ஒரு பெருங் கூடல்
விலங்கிடு பெருமரம் போல,
உலந்தன்று கொல்; அவன் மலைந்த மாவே? (273)

திணைமாலை நூற்றைம்பதில் ஒரு பாடல் ஒரு சொல் அடுக்கைக் கையாளும் முறை சிறப்புடையது.

கொன்றாய்! குருந்தாய்! கொடிமுல்லாய்! வாடினீர்;
நின்றேன் அறிந்தேன்; நெடுங்கண்ணாள் சென்றாளுக்கு
என் உரைத்தீர்க்கு என் உரைத்தாட்கு, என் உரைத்தீர்க்கு
என் உரைத்தாள்
மின் உரைத்த பூண் மிளிர விட்டு (81)

தலைமகள் இற்செறிக்கப்பட்டாள் என்பது அறிந்து, தலைமகன், அவள காத்து நீங்கியத் தினைப்புனம் கண்டு ஆறாத்துயருற்று, அப்புனத்துச் செடி கொடிகளைப் பார்த்து, "அவள் நீங்கியபின் வாடிப் போயிருக்கிறீர்கள்! நெடுங்கண்ணையுடையவள் உங்களை விட்டுச செல்லும்போது நீங்கள அவளிடம் என்ன சொன்னீர்கள்?

நீங்கள் சொல்லியதற்கு எதிர்வினையாக அவள் என்ன சொன்னாள்? அவள் சொன்னதற்கு நீங்கள் என்ன சொன்னீர்கள்? நீங்கள் சொன்னதற்கு அவள் என்ன சொன்னாள்?"

தலைவனின் அவலநிலையை இச்சொல்லடுக்கு முருகியல் இன்பம் தரும் வகையில் தெளிவாக்கக் காணலாம்.

சொற்களை அளந்து பெய்யும் திருவள்ளுவர், ஒரு சொல்லையோ, தொடரையோ அடுக்குவதை அரிதாகவே, அழுத்தம் கொடுக்கும் நோக்கில் கையாளுவார். ஆழ்ந்த கருத்தைச் சொல்லும் ஏழு சீர்களில் ஒரு சொல்லை மீண்டும் பயன்படுத்துவது கவிதை அழகுக்காக மட்டுமின்றிக் கருத்தை வலியுறுத்துவதற்காகவும் ஆகும். மிகவும் தேவையான போதே இதனை அவர் செய்யக் காணலாம்.

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு (267)

பொன்னானது தீயில் இட்டுச் சுடச்சுட அதன் மாசு நீங்கி, ஒளிவிடுவது போல் துன்பம் வருத்த வருத்தத் தவம் செய்வார்க்குக் குறைகள் நீங்கி அறிவு மிகும்.

தீ மேலும் மேலும் சுடுதலும் துன்பம் மேலும் மேலும் வருத்தலும் ஒரு சொல் அடுக்கால் குறிக்கப்பெறுகின்றன.

பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றுஎற்றுஎன்று
ஏதம் பலவும் தரும் (275)

ஆசைகளையெல்லாம் விட்டுவிட்டோம் என்று சொல்வாரது வஞ்சனையான ஒழுக்கம் அப்பொழுது இனிது போலத் தோன்றினும் பின்னால் என் செய்தோம் என் செய்தோம் என்று வருந்தும்படியாக அவர்களுக்குப பல துன்பங்களையும் தரும்.

அன்னார் வருந்தி வருந்திச் செய்வதறியாது இரங்கும் நிலையைக் குறிக்க, 'எற்று எற்று' என்று வள்ளுவர் எடுத்துரைப்பது தெளிவு.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று (297)

"ஒருவன் பொய்யாமையே பொய்யாமையே செய்ய வல்லவனாயின் அவன் பிற அறங்களைச் செய்யாமையே செய்யாமையே நன்று" எனற இக்குறளுக்குப் பொருள் கூறும் பரிமேலழகர் "அடுக்கு இரண்டனுள் முதலது இடை விடாமைமேற்று, ஏனையது துணிவின்மேற்று" என்பார். பொய்யாமை இடைவிடாது செய்தல் வேண்டும என்ற கருத்தும் அவ்வாறு செய்தால் பிற அறன்களின் பயன்களையெல்லாம் அதுவே தரவல்லது என்ற கருத்தும் அடுக்கால் வற்புறுத்தப்படுகின்றன.

இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை (310)

சினத்தை மிகுதியாகப் பெற்றவர் உயிருடையவர் ஆயினும் செத்தார்க்கு ஒப்பாவார். சினத்தை விட்டொழித்தவர் எல்லாவற்றையும் துறந்த துறவியர்க்கு இணையாவார்.

'இறந்தார் இறந்தார்' என்ற அடுக்கில் முதல் 'இறந்தார்' மிகுதியாகப் பெற்றவர் எனற பொருளிலும் இரண்டாவது 'இறந்தவர்' செத்தவர் என்ற பொருளிலும் கையாளப் பெற்றுள்ளன. 'துறந்தார் துறந்தார்' என்ற அடுக்கில் முதல், 'துறநதார்' சினத்தை விட்டவர் என்ற பொருளிலும் இரண்டாவது, 'துறந்தவர்' பற்றற்ற துறவியர் என்ற பொருளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன் (341)

"ஒருவன், யாதொரு பொருளின் யாதொரு பொருளின் நீங்கினான் அவன் அப்பொருளால் அப்பொருளால் துன்பம் எய்துதல் இல்லை" என்று பொருள் உரைகக்கும் பரிமேலழகர், 'அடுக்குகள் பன்மை குறித்து நின்றன' என்பார். பற்றுகள் பலவாதலின் அவற்றால் வரும் துன்பங்களும் பலவாம். எல்லாப் பொருளையும் ஒருங்கே விடுதல் சிறபபாயினும, அவ்வாறு செய்ய இயலாதபோது, ஒவ்வொன்றாக விடினும அவற்றால் வரும் துன்பம் இல்லாமல் போகும் என்பது கருதது

ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும் (792)

பண்பிலும செய்கையிலும் நல்லவன் என்பதைப் பலகாலும் பலவாற்றானும் ஆராய்ந்து ஒருவனோடு நட்புக் கொள்ளாதவன் முடிவில் தான் சாதற்கு ஏதுவாய் துன்பத்தினைத் தன் பகைவர் வேண்டாமல் தானே ·விளைவிப்பான்.

'ஆய்ந்து ஆய்ந்து' எனும் அடுக்கு நட்பு ஆராய்தல் எத்துணை இன்றியமையாததென்பதையும் எவ்வாறெல்லாம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் கோடிட்டுக் காட்டும்.

உழந்துஉழந்து உள்நீர் அறுக விழைந்துஇழைந்து
வேண்டி அவர்க்கண்ட கண் (1177)

விரும்பி, உள்ளம் உருகி, இடைவிடாதே அவரைக் கண்ட கண்கள் இன்று துயிலாது வருந்துவதாகிய துன்பத்தினை உழந்து உழந்து தம் அகத்திலுள்ள நீர் அற்றேப் போவதாக.

'அடுக்கு இடைவிடாமைக்கண் வந்தது' என்பார் பரிமேலழகர். துயிலாது வருந்துவதாகிய துன்பம், இடைவிடாது, தொடர்ந்து நிகழ்வதைச் சுட்ட வள்ளுவர் அடுக்கைக் கையாள்கிறார்.

யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று (1314)

காமம் நுகர்தற்குரிய இருவராயினார் யாவரினும் யாம் மிக்க காதலையுடையேம் என்றெண்ணி, 'யாரினும் நாம் காதல்ம்' என்றேனாக, அது கருதாது 'என்னால்' காதலிக்கப்பட்ட மகளிர் பலருள்ளும் நின்பால் காதலுடையேன்' என்றேனாகக் கருதி, 'அம்மகளிர் யாரினும் என் கண் காதலுடையர் ஆயினீர்' என்று கூறிப் புலந்தாள்.

தலைவன் காதல் கொண்ட மகளிர் மிகப் பலர் போலும் என்ற குற்றச்சாட்டை வலியுறுத்தத் தலைவன் சொன்ன, 'யாரினும்' என்ற சொல்லையே இருமுறை அடுக்கித் தலைவி தலைவனைச் சாடும் நயம் நோககற்பாலது.

நாலடியார் பாடல ஒன்று செல்வம் நிலையாமை பற்றிய கருத்தை மனத்தில் பதியுமாறு எடுத்துச் சொல்ல, அடுக்கை அடுக்கடுககாகப் பயன்படுத்திக் கொள்கிறது.

நின்றன நின்றன நில்லா வென உணர்ந்து
ஒன்றின ஒன்றின வல்லே செயிற் செய்க
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று (4)

நிலையானவை என்று நீ எண்ணிக் கொண்டிருப்பவையெல்லாம் நிலையற்றவை என்பதை உணர்ந்து உன்னால் முடிந்த அறச்செயல்களையெல்லாம் செய்துமுடி. ஏனெனில், உன் வாழ்நாள் கழிந்து கொண்டிருக்கிறது; கூற்று விரைந்து வநது கொண்டிருக்கிறது.

இப்பாடலில் வரும் அடுக்குகளின் சிறப்புணர்ந்த எல்லீசர் (F.W.Ellis) அதனைக் கீழ்க்கண்டவாறு ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பார்:

know that those things are uncertain which
thou regardest as uncertain and perform
quickly every act of charity within thy power;
for the days of thy life are gone! are gone!
and even now death swiftly
approacheth! approacheth!

சிலப்பதிகாரததுத் 'துன்ப மாலை'யில (2-29) இளங்கோ அடிகள் ஒரு சொல் அடுக்கை அவலவுணர்வின் உச்சத்தைத் தொடுமாறு கையாளுவார். 'ஆய்சசியர் குரவை' முடிந்தபின் ஆயர்முதுமகள் ஒருத்தி ஊரரவம் கேட்டு ஊருக்குள் சென்று, கோவலன் கொலையுண்ட செய்தி அறிந்து விரைந்து திரும்புகிறாள். சிலம்பு விற்கச் சென்ற கணவன இன்னும் திரும்பவில்லையே என்று ஏங்கி அழுது கொண்டிருக்கும் கண்ணகியிடம் நடந்ததைச் சொல்லத் தடுமாறுகிறாள். 'நீ கேள்விப்பட்டதென்னவென்று சொல்'லென்று கண்ணகி அவளை உள்ளத்துடிப்போடு கேட்கிறாள். ஆயர் மகளின வேதனையையும் கண்ணகியின் துனபத்தையும் துனபியல் நாடகக்

காடசியாகத் தீட்டும் கவிக்கோ இளங்கோ சொல்லடுக்கைப் பலமுறை பயன்படுத்துகிறார்

ஆயர் முதுமகள் ஆடிய சாயலாள்
பூவும் புகையும் புனைசாந்தும் கண்ணியும்
நீடுநீர் வையை நெடுமால் அடியேத்தத்
தூவித் துறைபடியப் போயினாள் மேவிக்
குரவை முடிவிலோர் ஊரரவம் கேட்டு
விரைவொடு வந்தாள் உளள்;
அவள்தான்,
சொல்லாடாள் சொல்லாடாள் நின்றாள்அந் நங்கைக்குச்
சொல்லாடும் சொல்லாடுந் தான்.
எல்லாவோ,
காதலன் காண்கிலேன் கலங்கிநோய் கைம்மிகும்
ஊதுலைதோற்க உயிர்க்கும்என் நெஞ்சன்றே
ஊதுலை தோற்க உயிர்க்கும்என் நெஞ்சாயின்
ஏதிலார் சொன்ன தெவன்வாழி யோதோழீ;
நண்பகற்போதே நடுக்குநோய் கைம்மிகும்
அன்பனைக் காணாது அலவும்என் நெஞ்சன்றே
அன்பனைக் காணாது அலவும்என் நெஞ்சாயின்
மன்பதை சொன்னது எவன் வாழியோ தோழீ;
தஞ்சமோ தோழீ தலைவன் வரக்காணேன்
வஞ்சமோ உண்டு மயங்கும்என் நெஞ்சன்றே
வஞ்சமோ உண்டு மயங்கும்என் நெஞ்சாயின்
எஞ்சலார் சொன்னது எவன் வாழியோ தோழியர்"
சொன்னது:
அரசுறை கோயில் அணியார் ஞெகிழம்
கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே
கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே
குரைகழல் மாக்கள் கொலைகுறித் தனரே
எனக்கேட்டு.

பொருள் பொருத்தமும் இசை நலமும் கொண்ட இவ்வரிகளுக்குத் தொடர் அடுக்குகள் அரிய அவலவுணர்வை எளிதில் ஏற்றக் காணலாம்.

சிவவாக்கியரின் சிவவாக்கியம் தலைசிறந்த இறையியல் நூல்களில் ஒன்று. யாவும் கடந்த இறைவனின் நிலையை எடுத்துச் சொல்லும் பாடல் ஒன்று பல தெய்வ நம்பிக்கையைச் சாடுகிறது.

அரியுமல்ல அரனுமல்ல அயனுமல்ல அப்புறம்
கருமை வெண்மை செம்மையும் கடந்து நின்ற காரணம்
பெரியதல்ல சிறியதல்ல பெண்ணும் ஆணும் அல்லவே
துரியமும் கடந்து நின்ற தூர தூர தூரமே.

அது அரியுமன்று, அரனுமன்று, அயனுமன்று. கருமையும் வெண்மையும் செம்மையும் ஆகிய நிறங்களையெல்லாம் கடந்து நின்ற காரணமாகும். அது பெரியதும் அன்று, சிறியதும் அன்று; ஆணும் அன்று, பெணணும் அன்று; அது ஆண்மநிலைகளையெல்லாம் தாண்டி வெகுதொலைவில் உள்ளது.

இறைவன் மனம், மொழி, மெய்களையெல்லாம் எவ்வளவு கடந்தவன் என்பதைத் தூர தூர தூரமே என்ற அடுக்கு நன்கு உணர்த்தும். எனவே எல்லீசர் அதனையும் ஆங்கிலத்தில் ஒருசொல் அடுக்காகவே மொழிபெயர்த்துத் தருவார்.

It is not Ari, it is not Aran, it is not Ayan;
Far beyond the black (the colour of Vishnu),
the white (the colour of Sivan) or the red
(the colour of Brama) stays the everlasting
cause; it is not great, it is not small
neihter it is male nor female. Beyond every
state of corporeal being it is farther, farther
and farther still.

ஒரு சொல அடுக்கை உணர்ச்சி வெள்ளம் பெருகுமாறு பயன்படுத்துவதில் இராமலிங்க அடிகளாாக்கு இணையாவாா மிகச சிலரே. உவமைகளை அடுக்குவதில் வல்லவரான அவர்

சொல்லையும் தொடரையும் பொருள் சிதையாது அடுக்குவதிலும் பேராற்றல் பெற்றவர். திருவருட்பாவில் மரணமிலாப் பெருவாழ்வு பெற இறைவனை எவ்வாறு மனம் உருகி உருகி வாழ்த்த வேண்டுமென்று வையகத்தார்க்கெல்லாம் அழைப்பு விடுகின்றார்.

நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து
நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே
நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்
ணீரதனால் உடம்பு
நனைந்து நனைந்து அருளமுதே
நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை
நாயகனே என்று
வனைந்து வனைந்து ஏத்துதும் நாம்
வம்மின் உலகிய லீர்
மரணமிலாப் பெருவாழ்வில்
வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன்
சத்தியம் சொல்கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில்
புகுந்தருணம் இதுவே.

இறைவனை நினைந்து, உணர்ந்து, உள்ளம் நெகிழ்ந்து, அன்பு நிறைந்து, கண்ணீரால் உடம்பு நனைந்து, வனைந்து வாழ்த்துதலே மரணமிலாப் பெரு வாழ்விற்கு வழியென்பார். அடுக்கு அவர் கருத்திற்கு அழுத்தம் கொடுத்து உணர்வைத் தூண்டுவதில் வெற்றி பெறுகிறது.

அடிகளாருடைய, 'தோழிக்கு உரிமை கிளத்தல்' என்னும் பதிகத்தின் முதற்பாடலில் தலைவிக்கும் தோழிக்கும் நிகழ்ந்த உரையாடல் ஒன்று சொல்லப்படுகின்றது. இறைவனாகிய தலைவனை விரும்பிய தலைவி அவன்பால் கொண்ட அன்பைத்தன் தோழிக்கு எடுத்துரைக்க அவள் 'நீ பிற தேவர் பால் அன்பு செலுத்தாதது ஏன்?' என்று வினவுவாள். தலைவியோ 'பிறதேவர் யாவர்க்கும் பயந்த குடி நான் அல்லள்' என்று விடையிறுப்பாள்.

நயந்துநட நாயகர் உன் நாயகரே எனினும்
நாடிய மந்திரங்கள் சில கூடி உரையிடவே
வியந்து மற்றைத் தேவர் எலாம் வரவும் அவர் நேயம்
விரும்பாதே இருப்பதென் நீ என்கின்றாய் தோழி
வயந்தரும் இந்திரர் பிரமர் நாரணர் காரணர்கள்
மற்றையர்கள் மற்றையர்கள் மற்றையர்கள் எவர்க்கும்
பயந்தகுடி அல்லடி நான் திருச்சிற்றம் பலத்தே
பதிநடஞ்செய் அடிப்பணிக்கே பதித்தகுடி அறியே
(5690)

தான் வணங்கும் சிவனைத்தவிர மற்ற பெருந் தெய்வங்களும் சிறுதெய்வங்களும் தனக்கு ஒரு பொருட்டு அல்ல என்று அவற்றையெல்லாம எள்ளிநகையாடும் முறையில் 'மற்றையாகள் மற்றையர்கள் மற்றையர்கள்' என்று ஒரே சொல்லை மூன்று முறை அடுக்குவாள். அவை கணக்கற்றவை யென்பதையும், பெயர்சொல்லும் தகுதியும் அற்றவை என்பதையும் இது புலப்படுத்தும்.

சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்
சிவ பெருமான் திருவடியே சேரப்பெற்றோம் (6-98-5)

என்று அப்பர் பாடியுள்ளது நம் நினைவிற்கு வரலாம்.

இராமலிங்க அடிகள் ஒருசொல் அடுக்கை உரைநடையில் இன்றியமையாமையைக் கருதிக் கையாளும் இடங்களும் உண்டு. மனு நெறி கண்ட வாசகம் அவர் உரைநடையிலும் ஆற்றல் மிக்கவர் என்பதற்கு அரிய சான்றாகும். அதன் இறுதியில் இறைவனின் திருவுருவைக் கண்டு மன்னன களிபேருவகை கொண்டதை அடிகளார் கீழ்க்கண்டவாறு ஓவியப்படுத்துவார்:

மனுச்சக்கரவர்த்தியானவர், இறைவனைக் கண்குளிரக் கண்டு களிப்படைந்து ஆனந்தநீர் ஊற்றுநீர் போலச் சுரந்து சுரந்து, விழுந்து விழுந்து, மார்பினிடத்து வண்டலாடவும் உடல்குழைந்து விதிர் விதிர்த்துச் சிலிர்சிலிர்த்து மயிர்க் கூச்செறிந்து என்பு நெக்கு விட்டுருகியும் மனம் கனிந்து கனிந்து கசிந்து கசிந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து படபடவென்று பதறிப்பதறி உருகியுருகி ஆனந்த

வெள்ளத்தில் அழுந்தி அழுந்திப் பரவசமாகியும்
.... என்று தோத்திரமும் செய்து தொழுது நின்றார்

இறைவனைக் கண்ட மானுடன் பெறும் மகிழ்ச்சியை இதனினும் சிறப்பாக எவ்வாறு வருணிக்க இயலும்? ஒரு சொல் அடுக்கின் பயன்பாட்டிற்கு இதனினும் தக்க சூழல் ஏது?

'கரும்புத்தோட்டத்திலே' எனும் இசைப்பாடலில் (தேசியகீதங்கள்) பாரதியார் தெற்கு மாகடலுக்கு நடுவில் உள்ள 'எண்ணற்ற தீவினிலே' இந்தியப் பெண்கள் படும்துயரை,

கரும்புத்தோட்டத்திலே – ஆ
கரும்புத்தோட்டத்திலே

என்ற பல்லவியோடு நானகு சரணங்களில் உள்ளத்தை உருக்கும் வண்ணம் எடுத்துரைக்கிறார். ஒரு சொல் அடுக்கு இரண்டு சரணங்களில் நம்மை விம்மி விம்மி அழ வைக்கிறது.

நாட்டை நினைப்பாரோ? – எந்த
நாளினிப் போயதைக் காண்பதென்றே அன்னை
வீட்டை நினைப்பாரோ? – அவர்
விம்மி விம்மி விம்மி விம்மி அழுங்குரல்
கேட்டிருப்பாய் காற்றே! – துன்பக்
கேணியிலே எங்கள் பெண்கள் அழுதசொல்
மீட்டும் உரையாயோ? – அவர்
விம்மி அழவும் திறம் கெட்டுப் போயினர்.
நெஞ்சம் குமுறுகிறார் - கற்பு
நீங்கிடச் செய்யும் கொடுமையிலே அந்தப்
பஞ்சை மகளிரெல்லாம் - துன்பப்
பட்டு மடிந்து மடிந்து மடிந்தொரு
தஞ்சமும் இல்லாதே – அவர்
சாகும் வழக்கத்தை இந்தக் கணத்தினில்
மிஞ்ச விடலாமோ? – ஹே
வீரமா காளி சாமுண்டி, காளீஸ்வரி.

இந்தப் பாட்டில் நெஞ்சைப் பறிகொடுத்த புதுமைப்பிததன் துன்பக்கேணி எனும் சிறுகதையை எழுதியது இங்கு நினைவு கூரற்குரியது.

அறிஞா உ.வே.சா. தமது தன் வரலாற்று நூலில் (என் சரித்திரம்) ஒரு பாடல பிறந்த நிகழ்ச்சியைச் சுவைபடச சொல்கிறார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் தமிழ்க்கல்வி பயின்ற மாணவர்கள் சைவ மடத்தில் உணவு உண்பது வழக்கம். அம்மடத்துச் சமையல்காரன் தரமான அரிசியைப் பயன்படுத்தாமல் சமைத்ததை உண்பது அவர்களின் துயர்மிக்க அன்றாட நிகழ்வாகும். ஒரு நாள் சோறு பரிமாறப்பட்டவுடன் உண்ணும் வேட்கையின்றி அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு நல்ல கவிதைப் பயிற்சி இருந்ததால் ஒரு மாணவன்,

'கொங்கன் வந்து பொங்கினான் குழியரிசிச் சோற்றினை'

என்று முதலடியைப் பாடினான். இன்னொருவன்,

'சங்கமங்கள் கூடியே சாப்பிடத் தொடங்கினார்'

என்று இரண்டாமடியை உரக்கச்சொனனான். மூன்றாமவன்,

'அங்குமிங்கும் பார்க்கிறீர் அமுதிற் கண்ணில்லையே'

என்று தொடர்ந்தான். நான்காமவன்,

'எங்கள் பாவம் எங்கள் பாவம் எங்கள் பாவம் ஈசனே!

என்று முடிததான். அது நான்கடிப் பாடலாகியது. முதல் மூன்று அடிகள் இலக்கணப்படி அமைந்திருப்பினும் நிகழ்ச்சியைச் சொல்லுவதாக அமைந்தனவே தவிர கவிதையாகவில்லை. நான்காமடியே, 'எங்கள் பாவம்' என்ற தொடர் அடுக்கின் மூலம் அவற்றைக் கவிதை நிலைக்கு உயர்த்தி அவர்களது துன்பத்தைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது.

கொங்கன் வந்து பொங்கினான் குழியரிசிச் சோற்றினை
சங்கமங்கள் கூடியே சாப்பிடத் தொடங்கினார்.
அங்குமிங்கும் பார்க்கிறீர் அமுதில் கண்ணில்லையே
எங்கள் பாவம் எங்கள் பாவம் எங்கள் பாவம் ஈசனே.

என்னும் கவிதை உயிர் பெறுவதற்கு நான்காம் அடியே பெரிதும் துணை செய்யக் காணலாம்.

உலக நாடக ஆசிரியர்களிலெல்லாம் உயர்ந்தவராகிய சேக்ஸ்பியர், கிங்லியர் எனும் துன்பியல் நாடகத்தின் இறுதிக் காட்சியில் மன்னன்லியரும் அவனால் புறக்கணிக்கப்பட்ட மூன்றாவது மகளும் உரையாடும் பகுதியில் சொல்லையும் தொடரையும் அடுக்கி நாடகத்தைப் படிப்போரின் உள்ளத்தைத் தொடுவார்.

King Lear : For, as I am a man, I think this lady to be my child cordelia.

Cordelia : And so I am, I am

King Lear : If you have poison for me, I will drink it.
I know you do not love me; for your sisters
Have, as I do remember, done me wrong;
you have some cause. they have not,

Cordelia : No cause, no cause

....

Cordelia : Shall we not see these daughters and these sisters?

King Lear : No, no, no, no! Come, Let's away to prison.

இச்சான்றுகள் யாவும் அடுக்கு எனும் உத்தியைத் திறம்படக் கையாளும்போது கவிஞர்கள் பெறும் வெற்றியைப் புலப்படுத்தும்.

சங்கச் செய்தி

நான்காம் தமிழ்ச் சங்கம் செந்தமிழ்க் கல்லூரியில், 'கல்வெட்டுக்களால் அறியலாகும் தமிழர் பண்பாடு' என்னும் பொருண்மையிலான இணையவழித் திறனறிவுத் தேர்வு 29.07.2020 முதல் 31.07.2020 வரை மூன்று நாள்கள் நடைபெற்றது. இத்தேர்வில் மொத்தம் 1884 ஆர்வலர்கள் கலந்துகொண்டனர். 50 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சியடைந்த 1880 ஆர்வலர்களுக்கு இணையவழி மின்சான்றிதழ் வழங்கப்பட்டது. உதவிப் பேராசிரியர் முனைவர் சு.மலர்விழி இத்தேர்வினை ஒருங்கிணைத்தார்.

செப்டம்பர் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

தனிநாயக அடிகளார்
(செப்.1)



சி.இலக்குவனார்
(செப்.3)



பாரதியார்
(செப்.11)

மறைமலையடிகள்
(செப்.15)



திரு.வி.க.
(செப்.17)

கவிமணி தேசிக
விநாயகம்பிள்ளை
(செப்.26)



இராய.
சொக்கலிங்கனார்
(செப்.30)

பதிப்பாசிரியர்: **பேராசிரியர் திரு. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் **ம.திருமலை**
முனைவர் **இ.மறைமலை**
முனைவர் **செ.கந்தசாமி**
முனைவர் **பெ.சுயம்பு**
முனைவர் **உ.கருப்பத்தேவன்**
முனைவர் **அ.நந்தினி**
முனைவர் **அ.தட்சிணாமூர்த்தி**
முனைவர் **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் **மு.மணிவேல்**
முனைவர் **இ.கி.ராமசாமி**
முனைவர் **உல.பாலசுப்பிரமணியன்**
முனைவர் **ச.கவிதா**

RNI Regd. No.5507/56

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் கி.வேணுகா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001,TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: **இரா.சதாசிவம்,** 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: **செந்தமிழ் அச்சகம்,** 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1